கீழக்கரை என்று அழைக்கப்படுகிறது. சிவாலயம் மிகப் பெரியதாக உள்ளது. பெருமான் கீழக்கரை மகாதேவர் என்று அழைக்கப்படுகிறார். இவருடைய கருவறையின் தெற்குக் கோட்டத்தில் உன்னியப்ப விநாயகர் எழுந்தருளியுள்ளார். இவருக்கு நேர்எதிரில் அமைந்துள்ள திருமாளிகைச் சுற்றில் பெரிய அடுப்பும் எண்ணெய்க் கொப்பரையும் உள்ளன. உன்னி யப்பம் பொறிப்பதை விநாயகர் கண்டு மகிழ்வதாகக் கூறுகின்றனர். விநாயகருக்கு நேராகவே நிவேதனம் தயாரிக்க அடுப்பு அமைக்கப் பட்டிருப்பது வேறெங்கும் இல்லாத புதுமை.

கோயிலுக்கு அருகில் பெரிய குளம் இருக்கிறது. கோயிலில் கங்கை, பார்வதி, முருகன், சாஸ்தா ஆகியோருக்குத் தனியாகச் சந்நிதிகள் உள்ளன. உன்னியப்பம் படைப்பதை அன்பர்களின் வேண்டுதலாக ஏற்று நிறைவேற்றுகின்றனர். மகாகணபதி உன்னியப்பம் விரும்பும் ஒப்பில்லாத கணபதியாக சித்திரிக்கப்படுகிறார். ❀

# சைதன்யபுரம் மகா கும்பாபிஷேக விழா

மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற திருவாரூர் மாவட்டம், குட வாசல் வட்டத்தைச் சேர்ந்த சைதன்யபுரம் பழைமை வாய்ந்த தலமாகும். சுக்ல யசூர் வேதத்தை அத்தியாயனம் செய்த மறையவர்கள் நிறைந்த பதி.

இவ்வூரில் புராதனமானதும், புராணச் சிறப்புகள் கொண்டதுமான மீனாட்சி சுந்தரேசுவரர்ஆலயம் உள்ளது.பெரிதும் சிதைவுற்றிருந்த இந்த ஆலயத்தை முழுவது மாகத் திருத்திக் கட்டித் திருப்பணி செய்துள் ளனர். ஐப்பசி மாதம் 13ம் தேதி திங்கட் கிழமை (29.10.2012) மகாகும்பாபிஷேகம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. கிராமவாசி களும், சைதன்யபுர ஆஸ்தீக சமாஜனத் தினரும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள் ளனர்.

சிவாலயத்துடன் ஊர்க் கோயில்களான அய்யனார், பிடாரி முதலிய ஆலயங்களும், புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்கு விழா நடத்தப்படும். காஞ்சிப் பெரியவர் அடிக்கடி இக்கிராமத்திற்கு விஜயம் செய்து பெருமை சேர்த்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். திருவண்ணாமலை விசிறி சாமிகள் என்று போற்றப்பட்ட யோகிராம் சுரத்குமார் சுவாமிகள் தம் ஞானத் திருஷ்டியில் கண்டு இத்தலத்தின் பெருமைகளை அடிக்கடி கூறி வியந்துள்ளார்.

வேதம் நிறை புண்ணிய பூமியில் நடைபெறும் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு இகபர சுகங்களைப் பெற அன்புடன் அழைக்கிறோம். ❀



**திருவாவடுதுறை ஆதீனத்தில் ஆடவல்லான் ஆவணி அஷேபிகம்**

❀ திருவாவடுதுறை ஆதீனத்தில் எழுந்தருளியிருக்கும் ஆனந்தமா நடராஜப் பெருமானுக்கு ஆவணி மாதத்திய சிறப்பு அபிஷேகம் 30.08.2012 வியாழக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. குருமகா சந்நிதானம் அவர்கள் நடராஜருக்குச் சிறப்பு அபிஷேகம் செய்து அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி அருள்பாலித்தார். ❀

**மயிலையில் வெள்ளி ரிஷப வாகனக் காட்சி;** மயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் சம்வத்ஸர அபிஷேகத்தையொட்டி 1008 சங்காபிஷேகமும் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதியுலாவும் 31.8.2012 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன. ❀